# أذكار



மூலம்:

முஹம்மத் எஸ். அல் முஹன்னா

தமிழில்: முஸ்Zஹிரா முபாரக்

மீள்பார்வை: மவ்லவி முஹம்மத்
ரிஸ்மி (அப்பாஸி)

மவ்லவி: முஹம்மத் இம்ரான (கபூரி)

# பிரார்த்தனைகள்

## குர்ஆன், ஹதீஸ் வழியில் பெறப்பட்ட தினசரிப் பிரார்த்தனைகள்.

இச்சிறு ஏட்டில் அன்றாட வாழ்வில் ஓத வேண்டிய முக்கிய சில துஆக்கள் அடங்கப் பெற்றுள்ளன. இதில் இடம் பெற்றுள்ள அனைத்து துஆக்களும் குர்ஆன், ஹதீஸ் ஒளியில் பெறப்பட்டதாகும். சகல வணக்க வழிபாடுகளும், செயல்களும் சரியான முறையில், அல்லாஹ் ஒருவனுக்கே நிறைவேற்ற வேண்டும் என்பதை எப்பொழுதும் நினைவிற் கொள்ள வேண்டும். ஆகவே, அவனை நினைப்பதையும் வணக்க வழிபாடுகள் செய்வதையும் நேரம் குறித்த கடமையாக நினையாமல் அனைத்து சந்தர்ப்பங்களிலும் அவனை நினைவு கூர்வது அவசியமாகும். அதனால் முக்கிய சில சந்தர்ப்பங்களில் ஓத வேண்டிய துஆக்களை இவ்வேட்டில் தொகுத்து தந்துள்ளோம்.
இது ஹிஸ்னுல் முஸ்லிம் எனும் சிறு நூலிருந்து திரட்டப்பட்ட துஆக்களின் தொகுப்பாகும்.

# பொருளடக்கம்


1. காலை, மாலை துஆக்கள் .......... 03
2. துாங்குவதற்கு முன் .................. 05
3. ஒவ்வொரு ஒன்று கூடலின் நிறைவிலும ........................................ 06
4. மலசல கூடம் நுழையும் போதும், வெளியேறும் போதும .................. 06
5. வுளு செய்த பின்னர் ..... .......... 07
6. நன்மை தேடித் தொழும் தொழுகை ....................................... 07
7. ஒவ்வொரு தொழுகையின் நிறைவிலும.............................. 08

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயர் கொண்டு ஆரம்பம் செய்கிறேன்.

## காலை, மாலை துஆக்கள்

١- اللَّهُمَّ بِكَ أَصْبَحْنَا وَبِكَ أَمْسَيْنَا وَبِكَ نَحْيَا وَبِكَ نَمُوْتُ وَإِلَيْكَ النُّشُور (في المساء : أَمْسَيْنا بَدَلاً مِنْ أَصْبَحْنَا، وَإِلَيْكَ الْمَصِيْر : بَدَلاً من وَإِلَيْكَ النُّشُور)

1) அல்லாஹு ம்ம பிக அஸ்பஹ்னா வபிக அம்ஸைனா வபிக நஹ்யா வபிக நமூது வஇலைகன் நுஷூ ர் (காலை வேளையில்......)

அல்லாஹு ம்ம பிக அம்ஸைனா வபிக அஸ்பஹ்னா வபிக நஹ்யா வபிக நமூது வஇலைகல் மசீர் (மாலை வேளையில்)

யாஅல்லாஹ்! உன் பொருட்டாலேயே காலையை அடைந்தோம். மேலும், உன் கிருபையினாலேயே மாலையையும் அடைந்துள்ளோம். இன்னும் உன் அருளைக் கொண்டே நாம் உயிர் வாழ்வதும், மரணிப்பதும் உள்ளது. பின்னர் மீண்டும் எழுப்பப்பட்டு வருவதும் உன்னிடமேயாகும். (மாலை வேளையில் மீளுதலும் உன்பாலே உள்ளது).

٢- اللَّهُمَّ أَنْتَ رَبِّي لَا إِلٰهَ إِلَّا أَنْتَ، خَلَقْتَنِي وَأَنَا عَبْدُكَ وَأَنَا عَلَى عَهْدِكَ وَوَعْدِكَ مَا اسْتَطَعْتُ أَعُوذُ بِكَ مِنْ شَرِّ مَا صَنَعْتُ أَبُوءُ لَكَ بِنِعْمَتِكَ عَلَيَّ وَأَبُوءُ بِذَنْبِي فَاغْفِرْ لِي فَإِنَّهُ لَا يَغْفِرُ الذُّنُوبَ إِلَّا أَنْتَ

2) அல்லாஹு ம்ம அன்த ரப்பீ லாஇலாஹ

**இல்லா அன்த ஹலக்தனீ வஅன அப்துக, வஅன அலா அஹ்திக வவஃதிக மஸ்ததஃது, அஊதுபிக மின்ஷர்ரீ மா ஸனஃது அபூஉலக பினிஃமதிக அலைய்ய வஅபூஉ பிதன்பீ பஹ்பிர்ழி பஇன்னஹூ லா யஃஹ்பிருத்துனூப இல்லா அன்த.**

யாஅல்லாஹ்! நீயே என் இரட்சகன். உன்னைத் தவிர வணக்கத்திற்குரியவன் எவனுமில்லை. நீயே என்னைப் படைத்தாய் நான் உனது அடிமை நான் என்னால் முடிந்தளவு உன் வாக்குறுதி மற்றும் உடன்படிக்கையின் மீது நிலைத்திருக்கிறேன். நான் என்னென்ன செய்தேனோ அவற்றின் தீமைகளை விட்டும் உன்னிடம் பாதுகாவல் தேடுகின்றேன். நீ என்மீது பொழிந்த அருட்கொடைகளைக் கொண்டு நான் உன்பக்கம் மீளுகிறேன். எனது பாவங்களைக் கொண்டும் உன்னிடம் மீளுகிறேன். எனவே! என்னை மன்னித்து அருள் புரிவாயாக!. ஏனெனில், உன்னைத் தவிர வேறு எவரும் பாவங்களை மன்னிப்பதில்லை.

٣- أَعُوْذُ بِكَلِمَاتِ اللّٰهِ التَّامَّاتِ مِنْ شَرِّ ما خَلَقَ (ثلاث مرات في المساء)

3) **அஊது பிகலிமாதில்லாஹி தாம்மாதி மின்ஷர்ரி மா ஹலக (3 முறை மாலையில்)**

அல்லாஹ்வின் பூரணமான கலிமாக்களைக் கொண்டு நான் பாதுகாவல் தேடுகின்றேன். அவன் படைத்த அனைத்து படைப்புகளின் தீமையை விட்டும்,,,

٤- بِسْمِ اللّٰهِ الَّذِي لاَ يَضُرُّ مَعَ اسْمِهِ شَيْءٌ فِي الأَرْضِ وَلاَ فِي السَّمَاءِ وَهُوَ السَّمِيْعُ العَلِيم (ثلاثا)

**4) பிஸ்மில்லாஹில்லதீ லாயழுர்ரு மஅஸ்மிஹி ஷெய்உன் பில்அர்ழி வலா பிஸ்ஸமாஹி வஹுவ வஸ்ஸமீஉல் அலீம் (3 தடவை)**

அல்லாஹ்வின் திருப்பெயர் கொண்டு தொடங்குகிறேன். அவன் எப்படிப்பட்டவன் எனில், அவனது பெயருடன் இந்தப் பூமியிலும், வானத்திலும் எப்பொருளும் தீங்கு அளித்திட முடியாது. அவன் எல்லாவற்றையும் பார்ப்பவனும், அறிபவனும் ஆவான் (3 முறை)

٥- رَضِيْتُ بِاللّٰهِ رَبّاً وَبِالإِسْلَام دِيْناً وَبِمُحمّدٍ نَبِيّاً (ثلاثاً)

**5) ரழீது பில்லாஹி ரப்பன் வபில் இஸ்லாமி தீனன் வபிமுஹம்மதின் (ஸல்)நபிய்யன் (3 முறை)**

அல்லாஹ்வை இரட்சகனாகவும், இஸ்லாத்தை மார்க்கமாகவும், முஹம்மத் (ஸல்) அலை அவர்களை நபியாகவும் திருப்தியுடன் ஏற்று கொண்டேன். (3 தடவை)

٦- سُبْحَانَ اللّٰهِ وَبِحَمْدِهِ عَدَدَ خَلْقِهِ وَرِضَا نَفْسِهِ وَزِنَةَ عَرْشِهِ وَمِدَادَ كَلِمَاتِهِ (ثلاث مرات في الصباح)

**6-ஸு ப்ஹானல்லாஹி வபிஹம்திஹி அதத ஹல்கிஹி வரிழா நப்ஸிஹி வஸினத அர்ஷிஹி வமிதாத கலிமாதிஹி (காலை 3 தடவை)**

அல்லாஹ்வை புகழ்வதோடு அவன் தூயவன் எனத் துதிக்கவும் செய்கிறேன். அவனது படைப்பினங்களின் எண்ணிக்கை அளவிற்கும், அவனது மனதின் திருப்தியின் அளவிற்கும், அவனது அர்ஷின் சுமை அளவிற்கும்,,

٧- سُبْحَانَ اللهِ وَبِحَمْدِهِ (مائة مرة)

7) சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி (100 தடவை)

அல்லாஹ்வை புகழ்வதோடு அவன் தூயவன் என துதிக்கவும் செய்கிறேன்.

٨- لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ، لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ (عشر مرات)

8) லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக லஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹு வஅலா குல்லி ஷைஇன் கதீர் (10 தடவை)

வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை. அவன் தனித்தவன். அவனுக்கு யாதொரு இணையுமில்லை. ஆட்சியதிகாரமும் புகழ் அனைத்தும் அவனுக்கே! அவன் அனைத்தின் மீதும் ஆற்றலுள்ளவன்.

٩- قُلْ هُوَ اللهُ أَحَدٌ......

9) குல் ஹுவல்லாஹு அஹத் அல்லாஹு ஸமத் லம் யலித் வலம் யூலத் வலம் யகுன்லஹு குபூவன் அஹத் (அல் இஹ்லாஸ் 112.)

١٠- قُلْ أَعُوْذُ بِرَبِّ الْفَلَقْ.........

10) குல் அஊதுபிரப்பில் பலக். மின்ஷர்ரீ மாஹலக். வமின் ஷர்ரீ ஹாஸிகின் இதா வகப். வமின் ஷர்ரி நப்பாசாதி பில் உகத் வமின் ஷர்ரி ஹாஸிதின் இதா ஹஸத். (அல்பலக் 113)

١١- قُلْ أَعُوْذُ بِرَبِّ النَّاسْ.........

11) குல் அஊது பிரப்பின்னாஸ் மலிகின்னாஸ் இலாஹின்னாஸ் மின் ஷர்ரில் வஸ்வாஸ் அல் ஹன்னாஸ் அல்லதீ யுவஸ்விசு பீ சுதூரின்னாஸ் மினல்ஜின்னதி வன்னாஸ். (அந்நாஸ் 114)

சூராக்களின் பொருளிற்காக அல் குர்ஆன் மொழி பெயர்ப்பைப் பார்க்க

## துாங்குவதற்கு முன்

١٢- ءامَنَ الرّسُولُ بِما أُنْزِلَ إِلَيْهِ مِنْ رَبِّهِ وَالمُؤْمِنُونَ....

**12) ஆமனர் ரசுலு பிமா உன்ஸில இலைஹி மின் ரப்பிஹி வல்மு ஃமினுான, குல்லுன் ஆமன பில்லாஹி வமலா இகதிஹி வகுதுபிஹி வருஸு லிஹி லாநுபர்ரிகு பய்ன அஹதின் மின் ருஸு லிஹி வகாலுா ஸமிஃனா வஅதஃனா குஃப்ரானக ரப்பனா வஇலைகல் மஸீர். லா யுகல்லிபுல்லாஹு நப்ஸன் இல்லா வுஸ்அஹா லஹா மா கஸபத் வஅலைஹா மக்தஸபத் ரப்பனா லா துஆஹித்னா இன்னஸீனா அவ் அக்தஃனா ரப்பனா வலா தஹ்மில் அலைனா இஸ்ரன் கமா ஹமல்தஹு அலல்லதீன மின் கப்லினா ரப்பனா வலா துஹம்மில்னா மாலா தாகத லனா பிஹி வஃபு அன்னா வஹ்பிர்லனா வர்ஹம்னா அன்த மவ்லானா பன்சுர்னா அலல் கவ்மில் காபிரீன்.**

பொருளை அறிந்து கொள்ள குர்ஆன் மொழி பெயர்ப்பை பார்க்க அல் பகரா 2:285-286

١٣- آية الكرسي....

**13) அல்லாஹு லா இலாஹ இல்லாஹு வல் ஹையுல் கையுாம் லா தஃஹு துஹு சினதுன் வலா நவ்ம் லஹு மா பிஸ்ஸமாவாதி வமா பில் அர்ழ் மன்தல்லதீ யஷ்பஉ இன்தஹு இல்லா பிஇத்னிஹி யஃலமு மாபய்ன ஐதீஹிம் வமா**

ஹல்பஹு ம் வலா யுஹீதூன பிஷைஇன் மின் இல்மிஹி இல்லா பிமா ஷாஅ வஸிஅ குர்ஸிய்யுஹு ஸ்ஸமாவாதி வல் அர்ழி வலா யஊதுஹு ஹிப்ழுஹு மா வஹு வல் அலீய்யுல் அழீம்.

பொருளை அறிந்து கொள்ள குர்ஆன் மொழி பெயர்ப்பை பார்க 2:255

١٤- بِاسْمِكَ اللَّهُمَّ أَمُوتُ وَأَحْيَا

**14) பிஸ்மிகல்லாஹு ம்ம அமூது வஅஹ்யா**

யா அல்லாஹ்! உன் பெயர் கொண்டே வாழவும், மரணிக்கவும் செய்கிறேன்.

١٥- اللَّهُمَّ قِنِي عَذَابَكَ يَوْمَ تَبْعَثُ عِبَادَكَ (ثلاثاً)

**15) அல்லாஹு ம்ம கினீ அதாபக யவ்ம தப்அஸு இபாதக (3 தடவை)**

யா அல்லாஹ்! உன் தண்டனையிலிருந்து என்னைக் காப்பாற்றிடு. உன் அடியார்களை எல்லாம் ஒன்று திரட்டும் அந்நாளில்.

அலி(ரழியல்லாஹு அன்ஹு ),மற்றும் பாத்திமா(ரழியல்லாஹு அன்ஹா)ஆகிய இருவரும், தமது வீட்டு வேலைகளில் உதவ பணியாளர் கேட்ட போது அண்ணல் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அருளினார்கள்: பணியாளரை விட சிறந்த ஒன்றை அறிவிக்கட்டுமா...? படுக்கைக்கு செல்லும் வேளையில்......

١٦- سُبْحَانَ اللّه (ثلاثًا وثلاثين)

**16) சுப்ஹானல்லாஹ் (33 தடவை)**
அல்லாஹ் தூய்மையானவன்

١٧- الحَمْدُ لله (ثلاثًا وثلاثين)

**17) அல்ஹம்துலில்லாஹ் (33 தடவை)**
எல்லா புகழும் அல்லாஹ்வுக்கே

١٨- اللّهُ أَكْبَرْ ( أربعاً وثلاثين)

**18) அல்லாஹு அக்பர் (34 தடவை)**
அல்லாஹ் மிகப் பெரியவன் என்று கூறுங்கள் அது உங்களுக்கு பணியாளரை விட சிறப்பானதாகும்.

## ஒவ்வொரு ஒன்றுகூடலின் நிறைவின் போதும்

சபையில் அறிந்தோ, அறியாமலோ ஏதும் தவறுகள் நிகழின் பின்வரும் துஆவை ஓதிக் கொள்வது அதற்கு பரிகாரமாக அமையும்.

١٩- سُبْحَانَكَ اللّهُمّ وَبِحَمْدِكَ أَشْهَدُ أن لا إِلَهَ إلا أَنْتَ أَسْتَغْفِرُكَ وَأَتُوبُ إِلَيْكَ

**19) சுப்ஹானகல்லாஹும்ம வபிஹம்திக அஷ்ஹது அன் லா இலாஹ இல்லா அன்த அஸ்த..பிருக வஅதுாபு இலைக்**

யா அல்லாஹ்! உன்னைப் புகழ்வதுடன் உனது துாய்மையையும் எடுத்துரைக்கின்றேன். வணக்கத்திற்குரிய இறைவன் உன்னைத் தவிர வேறு யாருமில்லை என்று நான் சாட்சியம் அளிக்கிறேன். மேலும், உன்னிடம் பாவமன்னிப்பு கோருகின்றேன்.

## மலசல கூடம் நுழையும் போதும், வெளியேறும் போதும்.

20) நுழைவதற்கு முன்னர்......

٢٠- (بِسْمِ اللّٰه) اللّٰهمّ إنّي أعوذُ بِكَ مِنَ الخُبثِ والخَبائِثِ

**பிஸ்மில்லாஹி அல்லாஹும்ம இன்னி அஊதுபிக மினல் குப்ஸி வல்கபாஇஸி**

அல்லாஹ்வின் திருப்பெயர் கொண்டு...! யா அல்லாஹ் தீய ஆண், பெண் ஷைத்தான்களிடமிருந்து உன்னிடம் பாதுகாவல் தேடுகின்றேன்.

٢١- غُفْرَانَكَ

21) வெளியேறும் போது..., குப்ரானக யா அல்லாஹ் உன்னிடம் பாவமன்னிப்புக் கோருகிறேன்.

## வுளு செய்ததன் பின்னர்

٢٢- أشْهَدُ أنْ لا إلٰهَ إلا اللّٰه وَحْدَهُ لا شَرِيْكَ لَهُ وَأشْهَدُ أنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

22) -**அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக்கலஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூ லுஹு**

வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு நாயன் இல்லை. அவன் தனித்தவன்.

அவனுக்கு இணை, துணை யாருமில்லை என்று நான் சாட்சியம் கூறுகிறேன்.

٢٣ـ اللَّهُمَّ اجْعَلْنِي مِنَ التَّوَّابِيْنَ وَاجْعَلْنِي مِنَ الْمُتَطَهِّرِيْنَ

**23) அல்லாஹும்ம ஜ்அல்னி மினத் தவ்வாபீன வஜ்அல்னி மினல் முததஹ்ஹிரீன்.**

யாஅல்லாஹ்! என்னை பாவமீட்சி தேடக்கூடியவர்களுள் ஒருவனாக ஆக்கியருள்வாயாக. மேலும், தூய்மை பெற்றவர்களுள் ஒருவனாகவும் ஆக்கி வைப்பாயாக.

## நன்மையைத் தேடித் தொழும் தொழுகை

நன்மையையும், சரியான முடிவையையும் எதிர்பார்த்து தொழும் தொழுகையே அல்-இஸ்திகாரா எனப்படுகின்றது. ஜாபிர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்:நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் எல்லாப் பணிகளின் முன்பதாக இறைவனிடம் நன்மையை தேடிக் கொள்ளுமாறு கற்றுத் தந்தார்கள். அதனை அவர்கள் குர்ஆன் வசனங்களைக் கற்பிப்பது போன்று கற்றுத் தந்தார்கள். உங்களில் எவரேனும் ஒரு பணியை செய்ய நாடினால் கடமையான தொழுகை தவிர 2 ரக்அத்துக்கள் தொழுது அதன் நிறைவில் இவ்வாறு பிரார்த்தனை செய்யட்டும்.

٢٤ـ اللَّهُمَّ إِنِّي أَسْتَخِيْرُكَ بِعِلْمِكَ، وَأَسْتَقْدِرُكَ بِقُدْرَتِكَ، وَأَسْأَلُكَ مِنْ فَضْلِكَ الْعَظِيْمِ، فَإِنَّكَ تَقْدِرُ وَلَا أَقْدِرُ وَتَعْلَمُ وَلَا أَعْلَمُ، وَأَنْتَ عَلَّامُ

الغُيُوْب . اللَّهُمّ إنْ كُنْتَ تَعْلَمُ أنّ هَذَا الأمْرَ خَيْرٌ لِيْ فِيْ دِيْنِي وَمَعَاشِي وعَاقِبَة أمْرِيْ فاقْدُرْهُ لِي ويَسّرْهُ لِي ثُمّ بَارِكْ لِي فِيْهِ وَإنْ كُنْتَ تَعْلَمُ أنّ هَذَا الأمْرَ شَرٌ لِي في دِيْنِي ومَعَاشِي وعَاقِبَة أمْرِي، فَاصْرِفْهُ عَنّي وَاصْرِفْنِي عَنْهُ وَاقْدُرْلِي الخَيْرَ حَيْثُ كَانَ ثُمّ أرْضِنِي بِهِ

**24) அல்லாஹும்ம இன்னீ அஸ்தகீருக பிஇல்மிக வஅஸ்தக்திருக பிகுத்ரதிக வஅஸ்அலுக மின் பழ்லிகல்அழீம் பஇன்னக தக்திரு வலா அக்திரு, வதஃலமு வலா அஃலம். வஅன்த அல்லாமுல் குயூப். அல்லாஹும்ம இன் குன்த தஃலமு அன்னஹாதல் அம்ர ஹைருன் லீ பி தீனீ வமஆஷீ வஆகிபதி அம்ரீ பக்குதுர்ஹு லீ வயஸ்ஸிர்ஹு லீ ஸும்ம பாரிக் லீ பீஹி வஇன் குன்த தஃலமு அன்ன**
**ஹாதல் அம்ர ஷர்ருன் லீ பீ தீனி வமஆஷீ வஆகிபதி அம்ரீ பஸ்ரிப்ஹு அன்னீ வஸ்ரிப்னி அன்ஹு வக்துர்லீ அல்ஹய்ர ஹய்ஸு கான சும்ம அர்ழினீ பிஹி.**

யா அல்லாஹ்! உன்னிடம் உனது ஞானத்தை கொண்டு நன்மையை யாசிக்கிறேன். மேலும், உனது ஆற்றலைக் கொண்டு ஆற்றலை யாசிக்கிறேன். மேலும் உன்னிடமிருந்து உனது மகத்தான அருளை யாசிக்கிறேன். ஏனெனில், நீ ஆற்றல் பெற்றவன். என்னிடம் எந்த ஆற்றலும் இல்லை, நீ நன்கு அறிபவன் நான் எதுவும் அறியேன். மேலும், நீ மறைவானவை அனைத்தையும் அறிபவன். யாஅல்லாஹ் இந்தப் பணி (தனது பணியியைக் குறிப்பிடுக) எனக்கும்,

எனது தீனுக்கும், எனது வாழ்க்கைக்கும், எனது விவகாரத்தின் முடிவிற்கும் நன்மையானது என நீ அறிந்தால் இதனை எனது விதியில் சேர்ப்பாயாக!. இதனை எனக்கு எளிமையாக்கித் தருவாயாக! பிறகு இதில் எனக்கு பாக்கியம் அருள்வாயாக! ஆனால் இப்பணி எனக்கும் எனது தீனுக்கும். எனது வாழ்க்கைக்கும், எனது விவகாரத்தின் முடிவிற்கும் தீமையானது என நீ அறிந்தால் இதனை என்னை விட்டும் நீ அகற்றி விடுவாயாக. இதனை விட்டு என்னையும் திருப்பி விடுவாயாக! மேலும், எனது விதியில் நன்மையை சேர்ப்பாயாக. அது எங்கிருந்தாலும் சரியே! பிறகு அதில் எனக்கு திருப்தியை ஏற்படுத்தி தருவாயாக.

## ஓவ்வொரு தொழுகையின் நிறைவிலும்

٢٥ـ أَسْتَغْفِرُ اللّٰه (ثلاثا)

**25- அஸ்தஃபிருல்லாஹ் (3 தடவை)**

அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோருகிறேன்.

٢٦ـ اللّٰهُمَّ أَنْتَ السَّلَام، وَمِنْكَ السَّلَام، تَبَارَكْتَ يَا ذَا الْجَلَالِ وَالإِكْرَام

**26) அல்லாஹுஉம்ம அன்தஸ்ஸலாம் வமின்கஸ்ஸலாம் தபாரக்த யாதல் ஜலாலி வல் இக்ராம்**

யா அல்லாஹ் நீ ஈடேற்றம் அளிப்பவன். உன்னிடம் இருந்தே ஈடேற்றம் உண்டாகின்றது. கண்ணியமும் மாண்பும் உடையவனே! நீயே அருட்பேருடையவன்.

٢٧- لَا إِلَهَ إِلَّا اللَّه وَحْدَهُ لَا شَرِيْكَ لَه، لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيْر

**27) லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக்கலஹு லஹு ல் முல்கு வலஹு ல் ஹம்து வஹு வஅலா குல்லி ஷைஇன் கதீர்.**

வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. அவன் தனித்தவன். அவனுக்கு யாதொரு இணையுமில்லை. ஆட்சியதிகாரமும், புகழ் அனைத்தும் அவனுக்கே! அவன் அனைத்தின் மீதும் பேராற்றல் உடையவன்.

٢٨- لَا حَوْلَ وَلَا قُوَّةَ إِلَّا بِاللَّه

**28) லாஹவ்ல வலா குவ்வத இல்ல பில்லாஹ்**

நன்மை செய்ய சக்தி பெறுவதும், தீமையை விட்டு விலகுவதும் அல்லாஹ்வின் உதவி கொண்டே தவிர வேறில்லை.

٢٩- لَا إِلَهَ إِلَّا اللَّه، وَلَا نَعْبُدُ إِلَّا إِيَّاهُ لَهُ النِّعْمَةُ وَلَهُ الْفَضْلُ وَلَهُ الثَّنَاءُ الْحَسَنْ.

**29) லா இலாஹ இல்லல்லாஹு வலா நஃபுது இல்லா இய்யாஹு லஹு ன்னிஃமது வலஹு ல் பழ்லு வலஹு ஸ்ஸனாஉல் ஹஸன்.**

வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. அவன் ஒருவனைத் தவிர யாரையும் நாங்கள் வணங்க மாட்டோம். அருட்கொடைகள், சிறப்புகள் மற்றும் அழகிய புகழ் அனைத்தும் அவனுக்குரியதே.

٣٠- لَا إِلَهَ إِلَّا اللَّهُ مُخْلِصِيْنَ لَهُ الدِّيْن وَلَوْ كَرِهَ الكَافِرُوْن

**30) லா இலாஹ இல்லல்லாஹு முஹ்லிசீன**

**லஹு த்தீன வலவ் கரிஹல் காபிரூன்.**

வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை. கீழ்படிதலை அவனுக்கே உரித்தாக்குகின்றோம். நிராகரிப்பாளர்கள் வெறுத்தாலும் சரியே!.

٣١- اللّهُمَّ لا مانِعَ لِما أعْطَيْتَ وَلا مُعْطِيَ لِما مَنَعْتَ، وَلا يَنْفَعُ ذَا الجَدِّ مِنْكَ الجَدُّ

**31) அல்லாஹும்ம லா மானிஅ லிமா அஃதைத வலா முஃதிய லிமா மனஃத வலா யன்பஉ தல்ஜத்தி மின்கல் ஜத்து**

யாஅல்லாஹ் நீ கொடுத்ததைத் தடுப்பவர் எவருமில்லை. நீ தடுத்ததைக் கொடுப்பவர் யாருமில்லை. செல்வம் உடையவர் எவரையும், அவரது செல்வம் உனது தண்டனையிலிருந்து காத்திட முடியாது.

٣٢- سُبْحانَ اللّه، والحَمْدُ للّه، وَاللّه أكْبَرْ (ثلاثاً وثلاثين)

**32) ஸுப்ஹானல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ், அல்லாஹு அக்பர்**

அல்லாஹ் தூய்மையானவன். எல்லாப் புகழும் இறைவனுக்கே. அல்லாஹ் மிகப் பெரியவன். (33 தடவை)

٣٣- آية الكرسي.....

**33) ஆயதுல் குர்ஸி,,,**

**அல்லாஹு லா இலாஹ இல்லாஹு வல் ஹைய்யுல் கைய்யூம் லா த..ஹுதுஹு சினதுன் வலா நவ்ம் லஹு மா பிஸ்ஸமாவாதி வமா பில் அர்ழ் மன்தல்லதீ யமஷ்பஉ இன்தஹு இல்லா பிஇத்னிஹி யஃலமு மாபய்ன ஐதீஹிம் வமா**

ஹல்பஹூ ம் வலா யுஹீதூன பிஷைஇன் மின் இல்மிஹி இல்லா பிமா ஷாஅ வஸிஅ குர்ஸிய்யுஹூ ஸ்ஸமாவாதி வல் அர்ழி வலா யஊதுஹூ ஹிப்ழுஹூ மா வஹூ வல் அலீய்யுல் அழீம்.

٣٤- قُلْ هُوَ اللّه أحَد.......

34) குல்ஹூ வல்லாஹூ அஹத்

குல் ஹூ வல்லாஹூ அஹத் அல்லாஹூ ஸமத் லம் யலித் வலம் யூலத் வலம் யகுன்லஹூ குபூவன் அஹத் (அல் இஹ்லாஸ் 112.)

٣٥- قُلْ أعُوْذُ بِرَبِّ الفَلَقْ......

35- குல் அஊது பிரப்பில் பலக்

குல் அஊதுபிரப்பில் பலக். மின்ஷர்ரீ மாஹலக். வமின் ஷர்ரீ ஹாஸிகின் இதா வகப்.

வமின் ஷர்ரி நப்பாசாதி பில் உகத் வமின் ஷர்ரி ஹாஸிதின் இதா ஹஸத். (அல்பலக் 113)

٣٦- قُلْ أعُوْذُ بِرَبِّ النَاسْ......

36) குல் அஊது பிரப்பின்னாஸ்

குல் அஊது பிரப்பின்னாஸ் மலிகின்னாஸ் இலாஹின்னாஸ் மின் ஷர்ரில் வஸ்வாஸ் அல் ஹன்னாஸ் அல்லதீ யுவஸ்விசு பீ சுதூரின்னாஸ் மினல்ஜின்னதி வன்னாஸ். (அந்நாஸ் 114)

-மேற்குறிப்பிட்ட குர்ஆன் வசனங்களின் பொருளை அறிந்து கொள்ள குர்ஆன் மொழியாக்கத்தை பார்வையிடுக.